செ.வெ.எண்: 23 நாள்: 14.12.2016

**புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (14.12.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பணிகள் மற்றும் பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

தமிழகஅரசு வருவாய்த்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி பொதுமக்களுக்கு தேவையான பல்வேறு சான்றிதழ்கள் மற்றும் முக்கிய பணிகளை வட்டாட்சியர் அலுவலகம் மூலம் மேற்கொள்ள உத்தரவிட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் கந்தர்வக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள் மற்றும் பணிகள் குறித்தும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இதில் வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் முதியோர் உதவித்தொகை ஆணைப்பதிவேடு, கட்டிட உரிமம் பதிவேடு, வழங்கல் பதிவேடு, வழக்குப்பதிவேடு, நகல் சான்று வழங்கும் பதிவேடு, நிலமாற்றம் பதிவேடு, சிறப்பு பதிவேடு, வாரிசு சான்று பதிவேடு, தன்பதிவேடு, இணையதளத்தின் மூலம் வழங்கப்பட்ட சான்றுகள் பதிவேடு, நிலவரி வசூல் பதிவேடு, முன்கொணர் பகிர்மானப்பதிவேடு உள்ளிட்ட பல்வேறு பதிவேடுகள் மற்றும் பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது அலுவலகங்களில் உள்ள அனைத்து பதிவேடுகளையும் முறையாக பராமரிக்கவும், அனைத்து வருவாய்த்துறை அலுவலர்களும் தங்களது தொடர்புடைய பணிகளை சிறப்பாக மேற்கொள்ளவும், மேலும் பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் மனுக்களின் மீது உரிய விசாரணை மேற்கொண்டு உடனடி நடவடிக்கை மேற்கொள்வதுடன் சான்றிதழ்களை தாமதமின்றி வழங்கவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கந்தர்வக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் தைப்பொங்கல் திருநாளுக்கு பொதுமக்களுக்கு வழங்குவதற்காக வைக்கப்பட்டுள்ள விலையில்லா வேஷ்டி, சேலையினை பார்வையிட்டார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு.அன்பழகன், வட்டாட்சியர்கள் திருமதி.இந்திராதேவி, திரு.சீனிவாசன் (ச.பா.தி), திரு.சுவாமிநாதன் (வ.அ) உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**